எங்கள்

# மலையகம்

ISSN 1391 - 3042

ENGAL MALAYAGAM

மலர் - 01 காலாண்டு சஞ்சிகை ஆகஸ்ட்-ஒக்டோபர் இதழ்02

மலையகம் முகிழ்த்த



முத்துக்கள்

இது ஒரு மக்கள் கலை இலக்கியப் பேரவை கண்டிக் கிளை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்

# மலையகம்

ஆகஸ்ட்-ஒக்டோபர் 1998

இதழ் இரண்டு

பிரதம ஆசிரியர்:
முத்து சம்பந்தர்

ஆசிரியர்:
வி.எம்.எஸ்.குணம்

ஆசிரியர் குழு:
ஆர்.முனியாண்டி
எஸ்.பி.செல்வராஜா

வெளியீடு:
மக்கள்கலைஇலக்கிய
பேரவை(கண்டிக்கிளை)

அச்சுப் பதிப்பு:
அலங்கார் அச்சகம்
கலஹா.



முகவரி:
எங்கள் மலையகம்,
3/3AA தரமசேனாமாவத்த
கண்டி,
ஸ்ரீலங்கா.



எங்கள

**மலையகம்**

| | |
|---|---|
| தனிப்பிரதி | 20/= |
| ஆண்டு சந்தா | 60/= |




போற்றுவார்
போற்றட்டும்
புழுதி வாரித்
தூற்றுவார்
தூற்றட்டும்
ஏற்றதொரு
கருத்தென்றால்
எடுத்துரைப்போம்
எவர் வரினும்
நில்லோம்
அஞ்சோம்

-கண்ணதாசன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கருத்து

பெரிய நீண்ட இடைவேளைக்குப் பின் எமது வசகர்களை நாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். குருகிய இடைவேளையில் எமது வாசர்களை நாம் தொட நினைத்த போதும் நீங்களாகவே எம்மை விட்டு நீண்ட இடைவெளியை ஆக்கிக் கொண்ட பொழுது எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே. காரணம் சஞ்சிகைக்கான சந்தா பலரிடமிருந்து இன்னும் வந்து சேரவில்லையே.

சிலர் எனின் நாம் சமாளிக்கலாம், பலர் எனின் நாம் என்ன செய்வது?

முதல் சஞசிகை எமது மக்களை வெகுவாகக் கவர்ந்து விட்டது என்பதுதான் அவர்களின் வெளிப்பாடுகளில் இருந்து நாம் புரிந்து கொண்டது. நீங்கள் இடும் உரத்தில் தான் எமது வளர்ச்சியும் தங்கியுள்ளது என்பதை நாம் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என்பதையும் நாம் அறிவோம்.

நடந்து முடிந்த சம்பள அதிகரிப்புப் போராட்டம் எமது மக்களை ஏமாற்றிவிட்டதில் "எங்கள் மலையகம்" சோகமடைகிறது. தொடர்ச்சியாகவே நாம் தொழிற்சங்கத்தலைவர்களை நம்பி ஏமாந்து வந்திருக்கின்றோம் என்பதை எமது வரலாறு கோடிட்டுக் காட்டுகிறது.

யானை தன் தலையில் மண் அள்ளிப்போட்டுக் கொண்டது போல நாம் சந்தாப்பணம் செலுத்தி நமக்காக ஏதும் செய்வார்கள் என்று நம்பியிருந்த நம்மவர் நடாத்தும் நமது தொழிற்சங்கக் கடைகளே நம்மை ஏமாற்றி நமது பெயரால் தம்மை வளர்த்துக் கொள்கின்ற போது நமக்கும் தொழிற்சங்கம் தேவை தானா? எனும் கேள்வி எழுகின்றதல்லாவா?

"எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த ஊரிலே...." என்பது போல் காலம் தான் நம் மலையகத்துக்கு பதில் சொல்ல வேண்டும்.

- ஆசிரியர் குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள்

சஜீரா

மக்கள் கலைஞன் தான் - என்று
மார்தட்டிக் கூவிக் கொள்ளவார்
மந்திரிக்கும் தந்திரிக்கும்
மாலையிட முந்திக் கொள்வர்.

சாராயக் குடி வெறியில்
சந்தியெல்லாம் சாடை சொல்வார்
சந்து பொந்து தேடிச் சென்று
சதி வேலை பலவும் செய்வார்

மக்கள் கலைஞர் தம்மை
மதியீனர் என்றுரைப்பார்
மக்கள் கலைஞர் தம்மை
மறைத்திடவே சூழ்ச்சி செய்வார்

முதலாளி மார்களுக்கு
முத்தாய்ப்பு வைத்திடுவார்
முதுகு கோணி முகமலர்ந்து
முகஸ்துதியம் பாடிடுவார்

பத்திரிகை தன்னில் - தன்
படம் வந்தால் போதுமென்று
பைத்தியக் காரனுக்கும்
பாமாலை பாடிடுவார்

விழாக்கள் பல சென்று
விளம்பரங்கள் தேட ஆசை
விடாப்பிடியாய் விழாக்களிலே
வார்த்தை நாலு பேச ஆசை

முதுகெழும்பே இல்லாத
முனை மழுங்கிப் போனவர்கள்
மக்கள் கலைஞர் என்றால்
மாக்களும் தான் சிரித்திடாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி.டி. என்றொரு

அமரர் வீ.டி.தருமலிங்கம் மத்தியதரக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் வி. வடிவேல். தாயார் பெயர். பி.பெரமாயி. அவரது தந்தையார் தலவாக்கலை மடப்கும்புற தேயிலைத் தோட்டத்தில் கணக்குப்பபிள்ளையாக வேலை செய்தவர். கண்ணியமான மனிதரான திரு. பி. வடிவேல் தனது மூத்தமகனாக வி.டீ..தருமலிங்கம் மூலமாக தமது குடுமபம் செம்மையாக வழிநடாத்தப்பட்டு உயர்வடையும் என்பதை முழுமையாக நம்பினார்.

இதனால் அமரர் வீ.டீ.தருமலிங்கம் மீது அவரது முழுக் குடும்பமும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தது. அதை தனது இறுதி மூச்சுவரை வீ.டீ.தருமலிங்கம் காப்பாற்றினார்.

1941.01.14 ல் மடக்கும்புற தோட்டத்தின் புதுக்காடு டிவிசனில் பொங்கள் தினமன்று மலையகத்துப் புதுப் பொங்களாய் மலர்ந்தார் அமரர் வீ.டீ.தருமலிங்கம்.

தனது ஆரம்பக்கல்வியை மடக்கும்புர புதுக்காடு தோட்டப்பாடசாலையிலும் பின்னர் 5ஆம் ஆண்டு முதல் பூண்டுலோயா தமிழ் வித்தியாலயத்திலும், 6 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (உ.த)ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும் தமது கல்வியைத் தொடர்ந்தார். தனது பள்ளிப்பருவத்தில் விளையாட்டு பாடல் நாடகம் பேச்சுப் போட்டிகளில் கலந்து பல பரிசுகளையும் பெற்றார் வீ.டீ.

1958 முதல் 1960 வரை திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டு தி.மு.க.வின் தீவிரத் தொண்டனாக மாறினார்.

1959 ல் வி.டி. இளைஞர் தமிழ்ச்சங்கம் என்ற அமைப்பொன்றை நிறுவினார்.

1961 ல் தனது க.பொ.த.(உ.த) கல்வியை நாவலப்பிட்டி கதிரேசன் குமார விதியாலயத்தில் தொடர்ந்தார்.கல்வி கற்கும் போதே மலையக சமூகத்தைப்பற்றி சதா சிந்தித்த வ ண ண மே இருந்ததார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964 ஆம் ஆண்டு மலையக இளைஞர் முன்னணி என்ற அமைப்பை ஆரம்பித்தார். 1971 ல் அவருக்கு அசிரியர் நியமனம் கிடைத்தது மஸ்கெலியா மு.வித்தியாலயத்தில் இவரது ஆசிரியர் பணியை ஆரம்பித்தார். 1972 ல் பண்மூர் வித்தியலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1973, 1974 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தனது ஆசிரியர் பயிற்சியைப் பெற்றார். அக்கால கட்டத்தில் ஆசிரியர் உரிமைப் போராட்டத்தை முன்னின்று நடத்தினார். இவரது உரிமைப் போராட்டம் வெற்றி பெறவே அவர் ஆசிரியமாணவர்களால் "தலைவர்" என்று அழைக்கப்பட்டார்.

அக்கால கட்டத்தில் தன்னோடு ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்ற திருகோணமலையைச் சேர்ந்த சௌந்தரியபிள்ளை எனும் அம்மையாரை காதலித்து 1975 ல் திருமணம் முடித்தார்.

1969 முதல் லங்கா சமசமாஜக் கட்சியில் ஈடுபாடு கொண்டு தீவிர உறுப்பினராக மாறினார். பல முக்கிய பதவிகளும் வகித்தார்.

1975 ல் "முன்னனி" என்ற பத்திரிகையை வெளியிட்டார் 1977 ல் பன்மூர் த.வி. அதிபராகப் பதவியேற்றார்.1982 ல் பொகவந்தலாவை சென் மேரிஸ் த.வி. அதிபரானார். அக்காலப்பகுதியில் மலையக வெகுஜன இயக்கத்தின் தலைவரானார். மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் மலையக மக்களுக்கு அரச காணிகளும் வீட்டு வசதிகளும் அரசினால் வழங்கப்பட வேண்டும் எனவும் குரல் கொடுத்தார். அன்னாரது கனவு நனவாகும் வேளையில் அன்னார் கண்மூடியது வேதனைக்குரியதாகும்.

மலையகப் பாரம்பரியக் கலையான காமன் கூத்து அழிந்துவிடுமோ என அஞ்சிய வி.டி. காமன் கூத்துக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் தானே "தூதனாக" நடித்து காமன் கூத்தை வளப்படுத்தினார்.

இளமை முதல் தன்னலம் கருதாது நேர்மையான போக்குடன் மலையக மக்கள் நலனுக்காக உழைத்த வீ.டீ.தருமலிங்கத்தை மலையக மக்கள் வெகுவாக நேசிக்கத் தொடங்கினர். இவரது தூண்டுதலின் பேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப் பீ.ஏ.காதர், திரு.பீ.சந்திரசேகரன் ஆகியோருடன் இணைந்து மலையக மக்கள் முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தினார்

மலையக மக்கள் முன்னணி பெரிதாக வளர்ந்த காலத்தில் அவர் அவசர கால தடுப்புச் சட்டத்திற்கமைய அரசினால் சிறையிலடைக்கப்பட்டார். பல வருடங்கள் சிறை வாழ்க்கை வாழ்ந்த அவர் சிறைக்கால வாழ்வில் பல கட்டுரைகளும், சிறுகதைகளும் எழுதினார்.

தனது வாழ்வின் இறுதிகட்டத்தில் மலையக மக்கள் முன்னணியில் ஏற்பட்ட சில மாற்றங்கள் அவரை வேதனைக்குள்ளாக்கியது. தன்னையும் கட்சியின் தலைவரையும் விரோதிகளாக்கி ம.ம. மு.வை சின்னாபின்னப்படுத்த சில தீய சக்திகள் முனைவதாக வீ.டீ.ஆர். அடிக்கடி கூறி வேதனைப்பட்டார்.

மத்திய மாகாணசபை உறுப்பினராக இருந்த சிறிது காலத்திலும் கல்விச் சாலைகளின் வளர்ச்சிக்காகப்பாடுபட்டார்.

சாதி, இன, மத பேத சமூக ஏற்றத்தாழ்வுகளை வெறுத்து ஒதுக்கிய வீ.டி. சகலருடனும் சமத்துவமாகப் பழகினார்.

1997.05.19 ஆம் திகதி மாரடைப்பால் தலவாக்கலையில் தமது கட்சிக்காரியாலயத்துக்கு முன்னால் அகால மரணமடைந்தார். மலையகத்திலே என்றும் காணாத ஜனத்திரள் அன்னாரது பதவுடலுக்கு அஞ்சலி செலுத்த தலவாக்கலை த.ம.வி வந்து திரண்டது.இதுவே மலையக வரலாற்றில் முதல் தடவையாக பிரமாண்ட மக்கள் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றிலிற் தோன்றாமை நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

"எங்கள் மலையகம்" ஆசிரியர் குழு அதன் முதல் வெளியீட்டை அமரர் வீ.டி. தருமலிங்கம் தலைமையில் 03.05.1997ல் சிட்டி மிஷன் மண்டபத்தில் நடாத்தியபோது அன்னார் தமது வாழ்நாளில் கடைசியாகக் கலந்து கொண்ட விழாவும் ஆற்றியு உரையும் இது தான்.

மக்கள் கலைஞன் முத்து சம்பந்தர் "தன்னை அரசியலுக்கு இட்டுச் சென்றவர் அமரர் வீ.டி." என தனது உரையில் குறிப்பிட்டிருந்ததை வாசித்து அமரர் வ:.டி. குழந்தைச் சிரிப்புச் சிரித்தார் அதுவே அவர் மகிழ்ச்சியோடு சிரித்த கடைசிச் சிரிப்பாகும்.

கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் "எங்கள் மலையகம்" வெளியீட்டு விழாவில் அவர் ஆற்றிய உரை அவர் இறந்த தினத்தன்று வீரகேசரி நாளிதழில் வெளியாகியது. அதையும் வாசித்து மகிழ்ந்து விட்டே காலமானார். அவர் உயிரோடு இருக்கும் போது கடைசியாக வெளிவந்த பத்திரிகை செய்தியும் அதுதான்.

- எங்கள் மலையகம் -

**எங்கள் மலையகத்துக்கு வாழ்த்து**

பொலியும் புத்தாண்டில்
நலி வெலாம் நீங்கி
நலம் புகழ் ஓங்கி
கல கலப்பாய் வாழ்க

சஞ்சிகை சந்தம் வெளிவந்து
சஞ்சலம் நீக்கும் சஞ்சீவியாக - மலையக
நெஞ்சங்களின் நிலை வெளியாகி
விஞ்சு புகழோங்கி
வாழ்க வளர்க

சிவயோகச் செல்வர்
த.சாம்பசிவம் **B.Com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தோழனே

முத்து சம்பந்தர்

நாம் கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக எவர் எவரையோ நம்பி எமது வாழ்க்கையைச் சீரழித்து விட்டோம்.

நமது தலைவர்கள் என்று சொல்லி பலபேர் எம்மிடையே வந்தார்கள் எமது உழைப்பு, ஊதியம், ஓட்டுரிமையை எவருக்கோ விற்று அவர்கள் லாபம் தேடிக் கொண்டு எம்மை ஆண்டாண்டு காலமாக தோட்ட லயன்களிலே முடக்கி விட்டு சொகுசான வாழ்க்கையைத் தேடி நகர்ப்புறங்களை நோக்கி ஓடிச்சென்று விட்டார்கள்.

எமது பிள்ளைகளின் படிப்பிலே மண்ணைத் தூவினார்கள் காரணம் எதிர்காலத்தில் அவர்கள் அறிவு பெற்று நியாயம் கேட்பார்கள் என்பதற்காக.

எமக்கு சம்பள உயர்வு பெற்றுத்தறுவதாக ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் மேடைகளில் முழங்கி எம்மை ஏமாற்றினார்கள். ஏன் நாம் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று உயர்ந்து விட்டால் அவர்களது பொம்மலாட்டம் கிழிந்து விடும் என்பதற்காக.

எமக்கு சொந்த வீடு கட்டித் தருவேன் என்று ஆகாய நிலவைக் கையிலே பிடித்துத்தறுவதாகவும் ஆசை வார்த்தைகள் கூறி எம்மை ஏமாற்றினார்கள். ஏன் நமக்கு சொந்த காணி வீடு கிடைத்துவிட்டால் நாம் அவர்களுக்கு சரிசமமாக ஆகி விடுவோம் என்பதற்காக.

எமக்கு நாட்டுரிமை பெற்றுத்தறுவதாகக் கூறி நாடாளுமன்றத்தில் பொய்யுரைத்தார்கள் காரணம் நமக்கு நாட்டுரிமை கிடைத்துவிட்டால் நாம் நாடாளும் உரிமை பெற்றுவிடுவோம் என்பதற்காக.

எனதருமைத் தோழர்களே எத்தர்களை நம்பி நாம் ஏமாந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கேடு கெட்டாயினும் எமது இனிய குழந்தைகளுக்கு இயன்ற வரை நல்ல கல்வியளிப்போம்.

எந்தக்கட்சிக் கொடியையும் எமதாகக் கொள்ளாது எமது பாட்டாளி மக்கள், எமது பண்புள்ள மக்களை, எம்மோடு வாழ்பவர்களை எமது தலைவர்களாக நாம் ஆக்குவோம்.

சாதி, இன, மத ஏற்றத்தாழ்வுகள் என்பது சாக்கடைக் குப்பகைள் என்பதனை நாம் உணர்ந்து நமது சமூக விடிவுக்காகக் கூடி பாடுபடுவோம்.

மற்றவரது குற்றம் குறைகளை் தேடிப்பிடித்து மற்றவரின் குற்றம் குறைகளை கூட்டத்தில கூவிப் பிதற்றுவதை விடுத்து நமது குற்றம் குறைகள் என்ன என்பதை உணர்ந்து நாம் நல்லவராக வாழப்பழகுவோம்.

குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கத்தை கூண்டோடு கூட்டித் தள்ளி குடிசைகள் தோரும் கூடிச் சென்று குற்றச் செயல் தடுக்க குரல் கொடுப்போம்.

நல்ல நூல்களை நல்ல நண்பர்களாகக் கொண்டு நாமும் வாசிப்பதோடு நம் குழந்தைகளுக்கும் வாசிக்கும் பழக்கத்தை ஊட்டுவோம்.

விடுமுறைக்காலங்களில் விருந்து பல சென்று விருந்தோம்பி விழாக்கள் பல கண்டு சமூக உறவுகளை சந்தோஷமாக நாம் வளர்ப்போம்.

மலையகத் தோழனே, நாளை மலரும் நமது மலையகத்தில் நல்ல சுத்தமான சுதந்திரக்காற்று சுழன்றாடட்டும். நீயும் நானும் சுதந்திரக் காற்றை சந்தோஷமாகச் சுவாசித்துவிட்டு அடுத்த சந்ததியை உயர்த்தி தோள்கொடுப்பொம். விரைந்து வா தோழனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுமணி

-இராகலை விஸ்வா-

வாழ்க்கைப் போராட்டம்
என்றே வழங்கிய
வார்த்தை
போர் வாழ்க்கையாய்
புடமிடப்பட்டதோ?

மனிதத்வம்
மரணப்படுக்கையில்
மானுடம்
புவிப் பரப்பில்
படு களத்தில்
குருதிப் படுக்கையிலோ?
இன்னுமொரு டார்விநிசமே
எழுதப்படுமாமோ?

சமாதானப் பறவைக்கு
சமாதியிலே
சிலை வைக்கவேண்டும்.
சிற்பிகளே!
அவசரமாகசெதுக்குவீரா?

அதோ சமாதானத்துக்கு
சாவுமணி
அடிக்கப்படுகிறதோ?

ஆம்
எல்லோரும்
எழுந்து நில்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைஞர் அறிமுகம்

## மலையகம் தந்த பில்லியட் ஸ்னூகர் விளையாட்டு வீரர்

# ஆர். லெச்சுமணன்

02

1948 ஆம் ஆண்டு திரு இராமசாமி ராமாயி எனும் சாதாரணத் தொழிலாளித் தம்பதிகளின் கண்டி மகியாவ கிராமத்தில் திரு. ஆர் லெச்சுமணன் பிறந்தவர். கண்டி கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்றவர்.

1996ல் தனது பில்லியட் விளையாட்டுப் பயிற்சியை ஆரம்பித்தவர் திரு.ஆர்.லெச்சுமணன்.சகல இன மக்களுடனும் சகோதரத்து வமாகப் பழகும் இவரிடம் அப்பகுதி மக்கள் மிகவும் விருப்பத்துடன் பழகுகின்றனர்.

1979ல் பில்லியட் விளையாட்டுக் குழுவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரராக இவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

தற்போது இலங்கை போக்குவரத்துச் சபை விளையாட்டுக்குழுவின் பில்லியட் ஸ்னூகர் விளையாட்டு வீரராக விளையாடுகின்றார்.

1985 ஆம் ஆண்டு இலங்கை தேசிய விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டு பாகிஸ்தானில் நடைபெற்றப் பொட்டிகளில் கலந்து கொண்டார். இவர் தேசியப் பயிற்சியாளராகவும் கடமையாற்றுகின்றார்.

விளையாட்டு மன அமைதியையும் சந்தோஷத்தையும் வழங்குவதோடு நல்ல ஒழுக்கத்தையும் நல்ல சிந்தனையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் என்று திரு.ஆர்.லெச்சுமணன் கூறுகிறாரர்.

ஆரம்பத்தில் தனது பயிற்சிகளுக்காக ஜனாப் எம்.ஹுசைன் என்பவரே உதவ வந்ததாகவும் தற்போதைய பயிற்சிக்கான உதவிகளை ஒரு முஸ்லீம் சகோதரரே உதவி வருவதாகவும் சிங்கள் சகோதரர்கள் பெருமளவு உதவி வருவதாகவும் ஆனால் இதுவரை ஒரு தமிழ் அன்பர் கூட தனக்கு உதவ முன்வரவில்லை என்றும் வருத்தத்துடன் இவர் கூறுகின்றார்.

முஸ்லீம் சகோதரர்களும் சிங்கள சகோதரர்களும் மற்றவரது வளர்ச்சிக்கு பெரிதும் கை கொடுத்து உதவும் போது தமிழ் அன்பர்கள் மாத்திரம் எந்த வித உதவியும் செய்யாதிருப்பது நமது தமிழ் சமூகத்தின் வளர்ச்சியற்ற தன்மையையே காட்டுகின்றது என்று வேதனையுடன் திரு.ஆர்.லெச்சுமணன் கூறினார்.

தற்போது கண்டி நித்தவளை எனும் பகுதியில் கூலி வீட்டில் வாழ்ந்துவரும் திரு.ஆர்.லெச்சுமணனுக்கு விளையாட்டு அமைச்சாவது வீட்டு வசதியும், வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து உதவ வேண்டும் என எங்கள் மலையகம் வேண்டுகோள் விடுக்கின்றது.

-ஆசிரியர் குழு-

## போலிச் சமாதானம்

அடடா...........
ஆகாயத்தில் பறந்தபோதுதான்
அதை நான் உணர்ந்தேன்
நான் பறக்கவிட்டது
புறா அல்ல - அது
பருந்து என்று

- ஷா -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி பெண்ணுக்கு வேலியா?

(எஸ்.மேகலா)

தாலி பெண்ணுக்கு வேலி என்று சொல்கின்றார்கள் ஆனால் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் அது அவ்வாறு இல்லை தாலி என்பது அவளது பாதுகாப்பை இல்லாதொழிக்கும். அவளை மூலியாக்கும் அடிமைச்சின்னமாகவும், அது இப்போது கையாளப்படுகின்றது.

கணவன் உயிருடன் வாழும் பொழுது எந்த மனைவியின் கழுத்திலும் தாலி அனாவசியமானதாகும். கணவன் உயிருடன் இருந்துஅவளது தாலியைவிட வேலியாக அவளைப் பாதுகாப்பான்.

ஆனால், கணவன் இறந்த பின்னரே கற்புடைய மனைவிமாரின் கழுத்தில் கணவனின் ஞாபகச் சின்னமான தாலி கட்டாயமாகத் தொங்க வேண்டும்.

அப்படிச் செய்வது கணவனது நினைவாகவும் அவளது கற்புக்கு உறுதுணையாகவும் அவள் மன உறுதிக்குப் பாதுகாப்பானதாகவும் அமையுமல்லவா?

கற்புடைய மங்கையர் கழுத்தில் நாள் பார்த்து கோள்பார்த்து கடவுள் சாட்சியாக கணவனால் கட்டப்பட்டத் தாலியை அவன் இறந்த பின்னர் கண்டகண்டவர் எல்லாம் கை தொட்டு கேவலமான முறையில் கழற்றி வீசுதல் நியாயம் தானா?

கணவனை விட மனைவி குறைந்த வயதுடையவளாக இருக்க வேண்டும்.என்றே ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட கலியாண நீதி சொல்லுகிறது. பொதுவாக இயற்கையின் கால வயதோட்டத்தின் படி கூடிய வயதுடையவர்களே முதலில் மடிய வேண்டும் அப்படியானால் திருமணவியாரத்தில் வயதில் முதிர்ந்த ஆண் மணமகனே முதலில் சாக வேண்டும். அப்படியானால் தாலிகட்டிய அத்தனை மங்கையரும் நிச்சயம் ஒரு நாள் தாலி அறுத்தே ஆக வேண்டும். இது நியாயமானதா?

பெண்கள் பூவுடனும் பொட்டுடனும் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்பினால் வயதில் குறைந்த ஆண்களை திருமணம் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் அல்லது தற்கொலை செய்து கொள்ள வேண்டும். அல்லது ஆண்களுக்கு தாலி கட்டுதல் வேண்டும். இது ஏற்கப்படுமா?

கணவனால் ஒரு மனைவியின் கழுத்தில் ஏற்றப்பட்ட தாலியை அவன் இறந்தபின்னர் கழற்றுவதற்கும் தொடர்ந்தும் கழுத்தில் தாங்கிக் கொள்ளுதற்கும் பூரண சுதந்திரத்தை அந்த மனைவியிடமே விட்டு விட வேண்டும்.

மறுமணம் செய்வதும், மறைந்த கணவனின் நினைவில் வாழ்வதும் அந்தப் பெண்ணே தீர்மாணிக்க வேண்டும். அவள் எடுக்கின்ற எந்த முடிவையும் சுதந்திரமாக நடைமுறைப்படுத்த அவளுக்கு பூரண உரிமை உண்டு. அதை வேறொருவர் தடுக்க நினைப்பதோ விமர்சனம் செய்வதோ மனித உரிமை மீறலாகும்.

90 வயது பாட்டன் இறந்து விட்டால் 85 வயது பாட்டிக்கு அவலமான முறையில் தாலி அறுக்கப்படுகின்றது. அந்த உணர்ச்சியற்ற ஜீவனும் அதை சடங்காக ஏற்கின்றது. தாலி அறுக்கப்படும் போதுதான் அது தனக்கு ஏதோ நடந்துவிட்டதாகவும், நடக்கப்போவதாகவும் உணர்வு பெற்று வேதனையில் சீக்கிரமே செத்து மடிகின்றது. இது தேவை தானா?

கணவனை இழந்த மனைவி தனது மகள், மகன்மார்களது நல்ல காரியங்களில் கூட முன் நின்று நடாத்த முடியாத இழிநிலை இன்றும் தொடர்கின்றது. தான் பெற்ற மக்களது நல்ல காரியங்களில் தானே முன்னிற்க முடியாத பரிதாப நிலை. அந்த சட்டத்தை அவள் பெற்றபிள்ளைகளும் ஏற்று மாற்றுத்தாய் ஒருத்தியால் மங்களச் சடங்குகளை ஏற்கின்றனர்.

மற்றவர்களுக்குத்தான் புத்தியில்லை என்றால் மார்பிலே உருண்டு, புரண்டு, தவழ்ந்து உதிரத்தைப்பாலாகக் குடித்த பாழும் பிள்ளைகளுக்குமா இது புரியவில்லை?

தனது தாய் தனது நல்ல காரியங்களில் முன்னின்று நடாத்தும் பாக்கியம் இல்லாத பாவிகளே அவர்கள் என்றால் கூட அது மிகை ஆகாதுதானே? கணவனை இழந்த தாய்மார்க்ள் கட்டாயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தலைமையில் தனது குடும்ப சுப நிகழ்வுகளையோ அசுப நிகழ்வுகளையோ தாமே முன்னின்று நடாத்த வேண்டும் அதை இனிவரும் காலங்களிலாவது நமது விதவைகள் என்று சொல்லப்படுகின்ற நம் மங்கையர்கள் துணிவுடன் கடைப்பிடிப்பார்களா?

கணவனை இழந்த மங்கையர்கள் நன்றாகப் பொட்டிட்டு, பூவிட்டு வர்ண உடை அணிந்து அழகாக வாழ வேண்டும் இது மறைந்த கணவனுக்கு கௌரவத்தையும், பெருமையையும் சேர்க்கக் கூடியதல்லவா?

இந்த அழகு மங்கையின் கணவன் தான் மறைந்த இன்னார் என்று கூறும் பொழுது அந்த மங்கையுடன் வாழ்ந்தவன் என்ற பெருமையும் மறைந்த கணவனுக்குக் கிடைக்கின்றதல்லவா?

மங்கையரே, விதவையரே ஆண்களால் எம்மை அடிமைகளாக்க போடப்பட்ட மூடத்தளைகளை உடைத்து சந்தோஷமாக பூவிட்டு, பொட்டிட்டு மடிவோம். இருக்கும் காலம் வரை சந்தோசமாக வாழ்வோம். இது எமது குழந்தைகளுக்கு உற்சாகமாகவும், தெம்பாகவும் அமையும் அல்லவா? எழுவோம். புது உலகு படைப்போம்.

## தியாகிகள்

நம் நாட்டு
நங்கையர்களின்
கற்பு,
மத்திய கிழக்கு
நாடுகளில்
ஏலத்தில் விற்கப்படுவதனால்
நம் நாட்டின்
பொருளாதாரம்
உயர்ச்சியடைகின்றது.

-மேகலா-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையகம்

1.மலையகம் மழையகந்தான்!
மழையினால் விளைந்த நற்றே
இலையகம்! இந்த நாடே
எதிர்பார்த்துக் காத்திருக்கும்
விலையகம்! வந்தீழத்தில்
வெளிநாட்டார் உல்லாசத்துத்
தலையகம் தண்மை வெம்மை
தன்னகத்துடையதாமே!

2. மண்ணல்ல, மரகதந்தான்
மரமல்ல, மாமேரன்றோ!
விண்ணல்ல வெண்பஞ்சாட்டம்
விளைவல்ல கொடையின் சான்று!
பெண்ணல்ல பேசும் சிற்பம்!
பேச்சல்ல, இசைத்தேனோசை
கண்ணல்ல, வேல் வாள் அம்பு
கண்கொள்ளாக் காட்சியாமே!

3. உள்ளமோ வெண்மை! ஆய்ந்து
உதவுதல் பசுமை! பார்க்கும்
கொள்ளையே கருமை! காணக்
கொதிப்பதே செம்மை! யாரும்
வள்ளல்கள் பொன்மை யாவர்!
வாழ்வு மந்தாரமே தான்!
எள்ளலாவொளி இல்லையில்லை
இரவிக்கும் கரிநாள் இங்கே!

4. உச்சியில் உயர்ந்தோருள்ளோர்!
உழைப்பவர் ஓட்டாண்டி தாமே!
அச்சமும் அடிமைப் போக்கும்
அகன்றிடும் நாளைக்காணோம்!
பிச்சையன் உச்சமேறிப்
பெரியவன் சரிந்த போதே
கச்சிதவம்மை கண்ட
கலையகம்! மலையகமே!

செல்வி . இ. தமிழரசி, ஈச்சந்தீவு - கிண்ணியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்திரு. எஸ். முத்தையா ஜே. பி**
(காப்பாளர் எங்கள் மலையகம்)
உரிமையாளர்,
லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனம்,
நத்தரம் பொத்த, குண்டசாலை
T.P.08 - 24217 - 32574

**பொருளாதார அபிவிருத்திக்கான கல்வியகம்**
உயர்திரு.எஸ்.ராஜலிங்கம்
142/12, நுவரெலியா ரோட்,
கம்பளை

**உயர்திரு. கே. சபாரட்ணம்**
(மலையக மக்கள் முன்னணி அமைப்பாளர்)
ஸ்டுடியோ வேல்ஸ்,
43, கம்பளை வீதி,
நாவலப்பிட்டிய.

**உயர்திரு. G. சிவராஜா ஜே. பி**
மலையக மக்கள் முன்னணி பிரதான அமைப்பாளர்,
'சன் சைன்' விளையாட்டுக்கழகத் தலைவர்,
'ராஜ் மஹால்ஸ்'
51/10, பழைய தபாற்கந்தோர் வீதி,
வத்தேகம, கண்டி.
T.P.08 - 476622

**உயர்திரு. பீ. யோகராஜா,**
'யோகா டெய்லர்ஸ்'
186 A - 3. D.S.சேனநாயக்கா வீதி
கண்டி
T.P. 08 - 224794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org